செய்திந் தாளாகப் பதிவு பெற்றது

வெள்ளிக்கிழமைதோறும் வெளிவரும்.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதி ஞூ (1889) ஆவணிமீ 28-ம் உ அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450 காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புஎ-அச] யாழ்ப்பாணம்:- பரிதாபி ஞூ ஆவணிமீ கூ உ வெள்ளிக்கிழமை (25-8-1972) [இல: உ0

## சைவ சமயம்

[கயப்பாக்கம் திரு. க. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள்]

(முன் வளர்ச்சி — 3)

சிவம் சும்மாயிருக்கும் என்று வேதம் சொல்லும் லௌகீக உதாரணத்தால் இதனை நிரூபிக்கலாம். வடமொழி வேதம் "சிவம் சதுர்த்தம், அத்வைதம், பிரசாந்தம் மன்யந்தே" என்னும். கோயம்புத்தூர் கோர்ட்டில் ஒரு முஸ்லீம் நண்பர் சாட்சி சொல்ல அழைக்கப்பட்டபோது அவர் சொன்னதாவது: "நான் சிவனே என்றும் திண்ணையில் உட்கார்ந்திருந்தேன். எனக்கு ஒண்ணும் தெரியாது" என்றார் இதனால் நாம் தெரிந்து கொள்வது சிவம் சாந்தமாயிருக்கும் என்பது பெறவில்லையா? புண்ணியபூமியாகிய இப்பரத கண்டத்தில் பல்வேறு தேச மக்களும் பல மதவாதிகளும், பலமொழி பேசுபவர்களும் வேதத்தைத் தங்கள் பிரமான நூல்களாகவும் ஒப்புக்கொள்கின்றனர். அறிதல் என்றும் கருத்தை உணர்த்தும் "வித்" என்னும் தாதுவின் அடியில் பிறந்ததே வேதம். அறிவின் இருப்பிடம் தான் வேதங்கள். இவைகள் பல பகுதிகளான சம்மிதைகள், பிராமணங்கள், ஆரண்யகங்கள், உபநிடதங்கள் முதலியனவாக விளங்கும் இவை ரிக், யஜுர், சாமம், அதர்வம் என நான்கு இவற்றுள்ளும் முந்தியது ரிக வேதம்; இவற்றைப் பரமேசுவரன் அநாயாசமாக அநாதியே அருளிச் செய்தான் என்பர்.

சிவனுக்கு 5 முகங்கள்: அவைகள் நான்கு திக்குகளை நோக்கி நான்கு முகங்களும் மேல் நோக்கிய முகமும் ஒன்ருகும்; கந்தபுராண வரலாற்றால கீழ்நோக்கிய அதோ முகமும் ஒன்று உண்டு என்று அறியவரும்.

கிழக்கு நோக்கிய முகம்; தத்புருஷம் 20 சாகைகளுடன ரிகவேதம்.

தெற்கு நோக்கிய முகம்: அகோரம 100 சாகைகளுடன் யஜுர்வேதம்.

வடக்கு நோக்கிய முகப்; வாமதேவம் 1000 சகைகளுடன் சாமவேதம்

மேற்கு நோக்கிய முகம்; சத்யோஜாதம் 9 சாகைகளுடன் அதர்வவேதம்.

மேல் நோக்கிய ஈசான முகத்திலிருந்து 28 ஆகமங்கள் வந்தன. இவையிரண்டும் பிரமாணங்களே. இதனை வலியுறுத்தவே திருமூலரும் திருமந்திரத்தில் பின்வருமாறு அருளியுள்ளார்.

"வேதமமோ டாகமம்
மெய்யாம் இறைவன் நூல்
ஓதும பொதுவும
சிறப்பும் எனறுன்னுக
நாதன உரையவை
நாடி லிரண்டந்தம்
பேதம தெனபர்
பெரியோர்க் கபேதமே".

வேதங்களுள், மிக முக்கியமானவை முதன் மூன்றேயாம் என்பர், வேத இலக்கியத்தைக் குறிக்கும் பெயர்களுள் "த்ரயீ வித்யா" என்பதொன்று. மூவகை வித்தை என்பது இதன் பொருள். ஆதலால், சிவனுக்கு "த்ரயீ" என்ற ஒரு பெயருமுண்டு. அதர்வம் நெடுங்காலத்திற்குப் பிறகு வநதது. வேதங்களின் எல்லை அல்லது முடிவு உபநிடகங்கள் எனவே வேதாந்தம் என்று உபநிடதங்களைக் கூறுவர். ஆகமங்களின் முடிவு ஆகமாந்தம் அல்லது சைவசித்தாந்தமாம். இவை பல்லாயிரக்கணக்கான வருஷங்கள் ஆகியும் இவற்றில் ஏதும் மாறுபாடில்லை. வேதங்களைச் சட்டங்கள் என்றும். ஆகமங்களை reports என்றும் ஸ்ரீ ஞானியார்சுவாமிகள் கூறியுள்ளார்கள். சட்டத்தைவிட reports அதிக பலமுடையவை என வழக்கறிஞர் கூறுவர், ஆகவே, வேதம் ஆகமம் ஆகிய இரண்டுமே நமக்கு அவசியம். சிலர் வேதத்தை மட்டுமே பிரமாணமாகக் கொள்வர். இது சரியல்ல.

(வளரும்)

### பண்டாரவளையில் தமிழ் விழா

பண்டாரவளை அர்ச். சூசையப்பர் கல்லூரி 'தமிழ் இலக்கியக் கலா மன்றம்' எதிர்வரும் 16-9-72 சனிக்கிழமை பி. ப. 2 மணியிலிருந்து, தமிழ் விழா ஒன்றினை பரந்த அடிப்படையில் நடாத்தவுள்ளது. மேற்படி கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இவ் விழாவில் உரையரங்கு, கவியரங்கு, நாடக அரங்கு ஆதியாம் நிகழ்ச்சிகள் இடம் பெற வுள்ளன உரையரங்கில் பல்கலைக் கழக விரிவுரையாளர்களும், அறிஞர்களும் பங்கு கொள்ளவிருக்கின்றார்கள். கவியரங்கிற்கு பிரபல எழுத்தாளர் திரு. க. சொக்கலிஙகம் [சொக்கன்] அவர்கள் தலைமை வகிக்கின்றார்கள் "ஏனடி ஏங்குகின்ருய்?" என்ற தலைப்பில் நிகழும் இக் கவியரங்கில் ஷை கல்லூரிமாணவர்களும பிரபல கவிஞர்களும் கலந்து கொள்வார்கள. அடுத்து, இக் கல்லூரி ஆசிரியர் திரு. என். திருச்செலவம் அவர்களது தயாரிப்பான சரித்திர நாடகமும் இடம்பெறும். இவ் விழாவிற்கான ஒழுங்குகளை கல்லூரி உப அதிபர் திரு. ஐ. மரியதாசன் அவாகள கவனித்து வருகின்ருாகள. [ந. நி]

உ
திருச்சிற்றம்பலம்

நீதியாய் நிலனுகி நெருப்பாய் நீராய்
நிறைகாலா யிவையிற்றி னியமமாகிப்
பாதியா யொன்ருகி யிரண்டாய் மூன்ருய்ப்
பரமாணு வாய்ப்பழுத்த பலகளாகி
சோதியா யிருளாகிச் சுவைக ளாகிச்
சுவை கலந்த வப்பாலாய் வீடாய் வீட்டின்
ஆதியாய் யந்தமாய் நின்ருன் றன்னை
யாரூரிற் கண்டடியே னயர்த் தவாறே

திருச்சிற்றம்பலம்
- திருநாவுக்கரசுசுவாமிகள்.

### நல்லை, திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் ஆண்டுவிழா

மதுரை ஆதீன இலங்கைக்கிளையாக ஸ்ரீ ஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகளால் 6-9-1966 ஆவணிக் கார்த்திகையன்று நல்லூரில் நிறுவப்பெற்ற நல்லை, ஞானசம்பந்தர் ஆதீனத்தின் 6 ம் ஆண்டு நிறைவு விழா 30-8-72 புதன்கிழமையன்று மிகச்சிறப்பாககொண்டாடப்பெறும். அன்று அதிகாலையிலிருந்து விசேடபூசை ஆராதனை, வழிபாடு, சொற்பொழிவுகள் ஆதியாம் நிகழ்ச்சுகள் இடம் பெறவுள்ளன. (ந. நி.)

### பொன் விழா

கைதடி சைவ ஐக்கிய சங்கத்தின் பொன்விழா நாளை சனிக்கிழமை (23-8-68) ஷெ சங்க வாசிகசாலை மண்டபத்தில மாலை 6 மணியளவில் நடைபெறவிருக்கின்றது பொன் விழா ஞாபகார்த்த மண்டபத் திறப்பு நிகழ்ந்தபின், வித்துவான் க கி. நடராஜன் B. O. L. அவர்கள் தலைமையில், விசேட மலர் வெளியீடும், திரு. க. சிவராமலிங்கம், செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியவர்களின் பொழிவுகளும், வில்லிசை இன்னிசை வாத்தியக் கச்சேரி முதலியன இடம்பெறும்.

### மாணவர்களுக்கான சமயபாடப் பரீட்சை

சைவபரிபாலன சபையார் பாடசாலை மாணவர்களுக்காக நடாத்தும் சைவசமய பாடப் பரீட்சை இவ் வருடம் நவம்பர் மாதம் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

விண்ணப்ப முடிவு திகதி 31-8-72. பிந்திய விண்ணப்ப முடிவுத் திகதி 15-9-72 மற்றும் விபரங்களுக்கு பரீட்சைக் காரியதரிசிக்கு எழுதுக.

நாவலர் நெறியில் நிகழும் இப்பரீட்சையில் பெருந்தொகையான பாடசாலைகள் பங்கு பற்றுகின்றன. எல்லாப் பாடசாலைகளும் பங்குபற்றிச் சிறப்பிக்க வேண்டுமென சைவ பரிபாலன சபையார் விரும்புகின்றனர்.

### குருமகாசந்நிதானம் ஒழுக்கத்தில் சிறந்தவர்கள்

#### நான் இன்று கண்ட அற்புதச் செயல்

சைவசமயத்தின் ஞானபிதாவான ஸ்ரீ மெய்கண்டதேவர் அவதாரஞ்செய்த திருப்பெண்ணாகடத்தில் தருமையாதீனம் 26 ஆவது மகாசந்நிதானம் ஸ்ரீ ல ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிசய சுவாமிகளுக்கு சிறப்பான வரவேற்பளித்தனர்.

வரவேற்புக்குழுவினர்சார்பில் நிலக்கிழார் திருகுஞ்சிபாதம் பிள்ளை அவர்கள் வரவேற்புரை இதழ்வாசித்து ஸ்ரீ மெய்கண்டதேவர் திருவுருவத்துடன் செய்துள்ள வெள்ளிப் பேழைக்குள் அதனை வைத்து சமர்ப்பித்து மாலை அணிவித்து உயர்ந்த பொன்னுடை போர்த்துப் பாரட்டுதல் செய்தார்கள். அதன் பின் திருக்குறள்வேள உயர் திரு G வரதராஜம்பிள்ளை B. A அவர்கள் பாராட்டுரை வழங்கினர்கள்.

"ஒருவருக்குசெல்வம்வரும் போகும், பதவி — வரும போகும், ஒன்று மட்டும் நிலையானது. அதுவே ஒழுக்கம் என்பதாகும். ஒழுக்கந்தான் நேர்மையைக் கொடுக்கக் கூடியதாகும், நமது குருமகா சந்நிதானம் அவர்கள் ஒழுக்கநெறியில் தலை சிறந்தவராவார்கள், ஒழுக்கமுடையோர் சொல்லுக்கு பேராற்றல் உண்டு நான் அந்த பேராற்றலை இன்று கண்டு கொண்டுள்ளேன். இன்று காலை கார் மூலம் ஊரிலிருந்து புறப்பட்டு இங்கு வரும்போது, என்னுடைய காது திடீரென்று அடைப்பு ஏற்பட்டு சத்தம் ஒன்றும் கேளாமல் போய் விட்டது. மருத்துவரை நாடி இதுவி பரத்தைக் கேட்டேன் மருத்துவர் காது செவிடாகப் போய்விட்டது என்று தெரிவித்தார். நான் கவலைகொண்டு இங்கு வந்து குருமகாசந்நிதானம் அவர்களைக் கண்டு நடந்துள்ள விஷயத்தைத் தெரிவித்து ஊருக்கு உடனே புறப்பட்டு போகவேண்டு

வளர்ச்சி 4-ம் பக்கம்

### தாயகம் திரும்புகின்ருர்

நமதுநாட்டிற் பன்னெடுங்காலம் வேதாரணியம் சைவக் குருமார் சைவத் தொண்டு புரிந்தமையை யாவரும்அறிவர். இலங்கை சுதந்திரம் அடைந்தபின் அவர்கள் சேவை தடைப்பட்டு விட்டது. முன் கடமைபுரிந்த சில குருமார்கள் தற்காலிக விசாவைப்பெற்றுக் கடமை புரிந்துவருகின்றனர். விசாவரி வந்த பின்பு சில குருமார் வரிப் பணம கட்ட முடியாத நிலையிலுள்ளார்கள்.

சுதுமலையில் நாற்பது வருடகாலமாக சைவப்பணி புரிந்து வந்த வேதாரணியம ஸ்ரீமத். அ. நடராசக்குருக்கள் அவர்கள விசாவரி கட்ட முடியாமையினுல் 26-8-72 தாயகம் திரும்புகின்ருர்.

### கதிர்காம யாத்திரையால் திரும்பினர்

வண்ணார்பண்ணை சின்னத்தம்பி சிவகுருநாதன் இவ்வருடக் கதிர்காம உற்சவத்துக்கு சைக்கிள் யாத்திரையாகச் சென்று அங்கு சடையம்மா மடத்தில் அடியார்களுக்குப் பணிபுரிந்து தொண்டாற்றி 23-8-72 அன்று யாழ்ப்பாணம் திரும்பினர். அவருடைய கடவுள் பக்தியையும் அடியார் சேவையையும் நாம் பாராட்டுகிருேம்.

THE HINDU ORGAN

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

பரிதாபி௵ ஆவணி மீ ௯ வெள்ளிக்கிழமை [1972]

## என்னிலுமினியானுளன்

என்னி லாரு மெனக்கினி யாரில்லை
என்னி லும்மினி யனெரு வன்னுளன்
என்னுளே யுயிர்ப்பாய்ப் புறம்போந்து புக்
கென்னுளே நிற்கு மின்னம்ப ரீசனே.

உலகில் ஒருவன் தன்னையே மற்றவர்களிலும் பார்க்க இனியவனுக மதிக்கின்ருன். தன்னை எல்லாரும் மதிக்க வேண்டுமென்று கருதுகின்ருன். தன்னைப் பிறர் குறை கூறுவதை விரும்பமாட்டான். தேடும் செல்வத்தைத் தனக்கே உரிமையாக்க விரும்புகின்ருன். அப்படிப்பட்ட மனப்பான்மை படைத்த ஒருவனைப் பார்த்துத் திருநாவுக் கரசுநாயனுர் கூறுகின்ருர்: “என்னிலு மினியா னொருவனு ளன். அவன் என்னுள்ளத்தில் எனது உயிருக்கு உயிராய் மூச்சாய் இருக்கின்ருன். அவன் உள்ளும் புறமும் அரு வமாய் நிறைந்திருக்கின்ருன். அவன்தான் என்னுள்ளத்தில் நிறைந்திருக்கும் திருவின்னம்மர் என்னும் தலத்தில் எழுந் தருளியிருக்கும் ஈசன்”

தன்னையே இனியவனுகக்கருதி வாழ்பவனுக்கு இன்ப மில்லை. தன்னிலும் பார்க்க சர்வஞ்ஞத்துவமும் சர்வ வல்லபமும் முற்றறிவும் எல்லா ஆன்மாக்களிடத்தும் அன்பும் இரக்கமும் படைத்த ஈசரனைத் தன்னினும் இனிய வனுக மதிக்கின்றவன் நற்கதியை யடைவான். அவன் என்றும் இன்பமாக வாழ்வான். அவனுக்கு ஒரு குறையு மில்லை. அவன் நல்லொழுக்கமுடையவனுய் எல்லா உயிர் களிலும் திருவின்னம்ப ரீசனையே காண்பான்.

இக்காலத்தில் மாணவர்களுக்கு இந்த உண்மையை புகட்டுகின்ற உபதேசம் அவசியம் தேவை. மாணவர்கள் நல்லொழுக்கம் உடையவர்களாய் வாழ இறைவனிடத் தில் பக்தியுண்டாக வேண்டும். இளமை நிலையில்லா தது, செல்வம் நிலையில்லாதது, எங்கள் யாக்கை நிலை யில்லாதது. இறைவனுடைய திருவடியே நிலையுள்ளது அத் திருவடியைப் பற்றுவதே துன்பங்களைத் துடைப்ப தற்கு மருந்து.

“தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றலரிது”

என்ற திருவள்ளுவர் திருவாக்கும் இக்கருத்தை வற் புறுத்துகின்றதல்லவா? எத்தொழிலைச் செய்தாலும் எக் கோலங்கொண்டாலும் சிறப்புப் பொருந்திய சங்கரன் தாளை மறவாது பணிசெய்தார் சாக்கிய நாயனுர்.

இளைஞர்கள் நல்லொழுக்கமுடையவர்களாய் வாழ வேண்டுமென்றும், அவர்களைநல்வழிப்படுத்தவேண்டுமென் றும் இதற்காகபெற்ரேர்களும், பெரியார்களும், சமய குர மாரும் உழைக்கவேண்டுமென்றும் நமது பிரதமர் கூட்டங் களில் பிரசாரஞ் செய்து வருகின்ருர். இளைஞர்கள் கட்டுப்பாடற்று வன்முறைகளைக் கடைப்பிடித்து வாழு கின்றமையை மனத்திற் கொண்டே அவர் இவ்விதம் பிரசாரம்செய்து வருகின்றனர். இறைவனடியை சிந்திக் கும் நல்லுபதேசத்தை பெரியார்கள் சிறுவர்களுக்கு பயிற் றிவருவார்களாயின் அவர்கள் எதிர்காலத்தில் சீலமும் அறிவும் பண்பும் படைத்து நாட்டில் நல்ல பிரசைகளா கத் திகழ்வார்கள்.

## தேவாரத் திருமுறைவகுப்பு

திருவருளை முன்னிட்டு சைவபரிபாலன சபையார் முன்னர் தெரிவித்த வண்ணம் 20-8-72 ஞாயிற்றுக் கிழமை பி. ப. 3 மணிக்குச் சபை காவலர் ஆச்சிரம மண்டபத்தில் தேவாரமணி மண்ணிசைச் செல்வன் திரு. P. A. S. இராஜசேகரன் அவர்கள் ஷ மண்டபத்தில் நடத்திய பண்ணிசை வகுப்பில் ஐந்து வருட காலம் பயின்றவராகிய இசைவல்லார் சங்கீதபூஷணம் திரு வ. பரசாமியவர்களை ஆசிரியராகக் கொண்டு, சிவஸ்ரீ கா. மகேஸ்வரக் குருக்களவர்கள் விசேட பூசைபுரிய தேவாரப் பண்ணிசை வகுப்பு மங்களமாக ஆரம்பிக்கப்பெற்றது 19 மாணவ மாணவிகள் வகுப்பில் சேர்ந்தனர். வகுப்பு முடிந்த பின்பு மண்டைதீவிலிருந்து இருவர் சமுகமளித்தனர்.

சபைத் தலைவர் திரு. த. சோமசுந்தரம், திருமுறைப் பயிற்சிக் கழகத் தலைவர் பண்டிதர் மு. கந்தையா, நெடுந்தீவு சிவபூஜ துரந்திரர் திரு- தி. கணபதிப்பிள்ளை சித்தாந்த மாணவன் திரு. பொ. இரத்தினம், திரு. சி கார்த்திகேசு திரு மு. மயில்வாகனம் திரு. ம அமிர்தலிங்கம் ஆகியோர்களும் சமுகமாயிருந்து வகுப்பாரயபத்திற்கலந்து கொண்டனர் இறைவன் அருளால் சபையின் பெருமுயற்சி சிறப்புடன் நடைபெத் தில்லை நடராஜப் பெருமான் அருள் புரிவாஞக.

## பித்தன்

— மூகாந்திரம். E. P. இராசையா J P. —

உலக முறைகளுக்கு மாருன செயல்களைப் புரிந்து மனம் போன போக்கெல்லாம் போகின்றவர்களை 'பித்தர்கள்' என்று நினைக்கின்ரேம்.

**தாயின் பித்து:**

நெடுங்காலமாக பிள்ளைப்பேறு கிடையாத ஒரு பெண் அருந்தவஞ் செய்து ஓர் ஆண்மகனை ஆசையோடு பெற்றெடுத்து தன் உயிரினும் மேலாக அவனை வளர்த்து வயது வந்ததும் அவனுக்கேற்ற ஓர் பெண்ணைத் தேடி அவனுக்கு திருமணம் செய்து வைக்கிருள்.

மருமகளோ வீட்டிற்கு வந்த சொற்ப காலத்தில் தனது ஆட்சியைத் தொடங்கி நாளடைவில் மாமிக்கு கொடுமை பல செய்யத் தொடங்குகிருள். தன் இல்லத் தரசியைக் கண்டிக்கவோ, எதிர்க்கவோ முடியாத மகன் தாயை வையத் தொடங்கி, அவளின் குற்றங்களைப் பெருப்பித்து. பின் அவளுக்கு ஊணும் உடையும் கொடுக்க மறுத்து அவளை வீட்டைவிட்டு வெருட்டிக் கலைத்துவிடுகிருன்.

மகனின் இத்தகாத செய்கையைக் கண்ட உற்ருர், உறவினர் மனம்பொருது அவனைக் கண்டிக்க முயலுகிருர்கள். அதைத் தடுக்க அவனது தாய் ஓடோடிச் சென்று சுற்றத்தார் கால்களில் விழுந்து மன்ருடி “என் மகனை ஒன்றும் செய்யாதீர்கள்” என மன்ருடுகின்ருள். அவளின பரிதாப நிலையைக் கண்டு உதவிக்குப் போன சுற்றத்தார், அவளின் செய்கையைப் பார்த்து “அவள் பைத்தியக்காரி, பித்துப் பிடிச் சாடுகிருள்” என்று குறை கூறிச் செல்லுகிருர்கள். இது ஓர் விதமான பித்து. இக்கதை “பெற்ற மனம் பித்தும் பிள்ளை மனங் கல்லும்” என்ற முதுமொழியை நினைவூட்டுகின்றது.

**கடவுளின் பித்து**

கடுங் கஷ்டத்துக்குள்ளான ஓர் தாய்க்கு தன் சேயினிடத்தில் இவ்வளவு பற்று இருக்குமேயானுல், எல்லா உலகங்களிலும் உள்ள உயிர்களுக்கும் தாயாகிய தெய்வத்திற்குத் தன் குழந்தைகளினிடத்து எவ்வளவு பற்று இருக்கும். இதனுற்ருன் சேக்கிழார் கடவுளை “மெய்த் தாயினும் இனியான்” என்ருர், அப்படிப்பட்ட பற்றை “பித்து” என்று சொல்வார்கள்.

உயிர்கள் தன்னிடம் பற்றுக்கொண்டாலும்; கொள்ளாவிட்டாலும், அவர்களின் நன்மையைக் கருதி கடவுள் அவர்கள் மீது பித்துக் கொண்டுள்ளார். இராமலிங்க சுவாமிகள் “நினைப் பித்தாவென்று நீ நினைப்பித்தால் யானும் அழைப்பேன்” என்று கடவுளின் கருணையை விளக்க உத்தரவு கேட்டுள்ளார்.

மாணிக்கவாசகர் சிவபெருமானின் திருவிளையாடல்கள் அனைத்துமே ஒரு பித்துப் புராணம் என்று கூறுகிருர்:- வெங்கரியன் உரிப்பிச்சன்; தோலுடைய பிச்சன்; என்னையும் ஆளுடைப் பிச்சன்” பித்தன் என்ற பெயரால் தன்னை ஒருமுறை அழைத்தார்க்கு அவன் பரமபதம் அளித்து அருள்கிருனும்.

**நீ பித்தனே ?**

ஆசைக் கடலில் சுந்தரரைக் மூழ்கவிடக் கூடாதென்று சிவபெருமான் சுந்தரரின் திருமணதின் போது அவரைத் தடுத்தாட்கொள்ள, வேதியர் வேடத்தில் சென்று “அந்தணராகிய தமக்கு, அந்தணராகிய சுந்தரர் அடிமை” என்று வற்புறுத்து திருமணத்தை ஒரு ஆவணங்காட்டி தடுத்தது தெரிந்ததே.

“ஆட்சியில் ஆவணத்தில் அயலார் தங்கள் காட்சியில் இல்லாத ஒரு வழக்கத்தைக் கூறி வல்வழக்காடிய வேடதாரி வேதியரைச் சுந்தரர் சினந்து “நீ பித்தனே” என்று பேசிய சொல்லே பின்பு சுந்தரர் அன்போடு பாடிய தேவாரத்தின் தொடக்கச் சொல்லாய் அமைந்தது. “பித்தா, பிறைசூடி! பெருமாளே அருளாளா” என்று தொடங்கும் தேவாரம் பித்தன் என்றதை நினைவூட்டிக் கொண்டிருக்கின்றது.

**நஞ்சுண்ட பித்தன்**

பாற் கடல் கடைந்தபோது, அது அளித்த இனிமையான அமுதத்தை உண்ணுமல், மரணத்தை அளிக்கும் நஞ்சினை சிவபிரான் என உண்டார்? தன்னை நம்பி வந்த அடியார்களிடம் அவர் கொண்ட கருணை என்ற பித்தின் காரணமாக நஞ்சையுண்டார். அந்நஞ்சு கண்டத்தில் தங்கியபடியால் அவருக்கு “திரு நீலகண்டன்” என்ற சிறப்புப் பெயர் கிடைத்தது. ஆன்மாக்கள் உய்

(வளர்ச்சி 4-ம பக்கம்)

## பத்திரிகை மசோதா

பத்திரிகைச் சபை மசோதாவுக்குக் கடுமையான எதிர்ப்பு தெரிவிக்கப்படுகின்றது. ஷ மசோதாவில் பாதகமான அம்சங்களை நீக்கவேண்டுமென பத்திரிகாசிரியர்களும், பிரபல அரசியற் றலைவர்கள் பலரும் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

## அணிந்துரை அரங்கம்

### யோகசுவாமிகள்

ஆக்கியோன் :
திரு ச அம்பிகைபாகன்
விலை ரூபா 3-00
அச்சுப் பதிவு :
ஸ்ரீ சண்முகநாத அச்சகம்,
யாழ்ப்பாணம்

ஸ்ரீலஸ்ரீ யோகசுவாமிகள் நல்லைக் கநதசுவாமிகோயில் தேரடியில் ஸ்ரீலஸ்ரீ செல்லப்பாச்சுவாமிகளிடம உபதேசம்பெற்ருரென்ற காரணத்திற்காக நூலின் மேல் அட்டையில் கந்தசுவாமி கோயிலின் அழகான திருவுருவம் சேர்க்கப்பட்டிருக்கின்றது திரு. ச அம்பிகைபாகன் அவர்கள் ஈழத்தில் சிறந்த சைவப்பணியும் தமிழ்ப்பணியும் புரிந்து வருகின்றனர். அவருக்கு அததகைய புண்ணியப் பணி புரியும் பண்பு கருவிலேயே அமைந்துள்ளது. அவருடைய பெற்ருேர்கள் சிவனடிக்கு அன்பு பூணடவர்கள். அவருடைய பெரிய தந்தையார் நாவலா பெருமான் உபதேசத்தைக் கடைப்பிடித்துத் தினமும் சைவானுட்டானம் பஞ்சாட்சர செபம புரிந்து வைதிக சைவ வாழ்க்கையைப் பின் பற்றி ஒழுகியவர். தவமும் தவமுடையார்க்கேயாகும என்ற முறையில் முன்னைத தவம் திரு. அம்பிகைபாகன் அவர்களைச் சிவதொண்டில் ஈடுபடச் செய்தது. அவர் சிறு வயதிலே சுன்னுகம் செல்லாச்சியமமையாரையும யோகர் சுவாமிகளையும் கண்டு அப் பெரியார்களுடைய நல்லாசியைப் பெற்ருர்.

செல்லாச்சியம்மையாருடைய வரலாற்றை முன்னரே எழுதி ஒரு நூலாகப் பிரசுரஞ் செயதார். யோகர் சுவாமிகளுடைய வரலாற்றை உலகமறியச்செய்ய வேண்டுமென்பது அவருடைய பேரவா. யோகர் சுவாமிகள தன்னுடைய வாழ்க்கை வரலாற்றை எழுதி வெளியிடுவதை விரும்பவில்லை. ஆனுல் திரு அம்பிகைபாகன், சுவாமிகள பூரணமடைந்த பின் அவருடைய வரலாற்றை வெளியிட விருப்பினுர்.

ஸ்ரீலஸ்ரீ யோகர் சுவாமிகளுடைய வரலாற்றின் சிலபாகங்களை கட்டுரைகளாக வரைந்து பத்திரிகைகளில் அழகான படங்களுடன் வெளியிட்டார். அவற்றையெல்லாம் தொகுத்து இன்னும் சேர்க்கவேண்டியவற்றைச் சேர்த்து இலகுவான நடையில் எழுதி இந்நூலை வெளியிட்டுள்ளனர். யோகர் சுவாமிகளுடைய பெருமையை எவராலும் பூரணமாக விளக்கமுடியாது. சுவாமிகளுடைய திருவாக்குகள், மெய்ஞ்ஞான பரம்பரை, சுவாமிகளுடைய தோற்றம், உபதேசம், கதிர்காம யாத்திரை, தொண்டுகள், சுவாமிகளின் பிற்கால வாழ்க்கை, சமாதிப்பேறு முதலிய அத்தியாயங்கள் நூலில் அடங்கியுள்ளன.

‘திருப்பொற்பாதத்தனுபூதி சிறக்கப் பாலித்தருள்வாயே”
என்ற அருணகிரி வாக்கிற்கமைவாக திருப்பொற்பாதத்தனுபூதி பெற்ற புண்ணியமூர்த்தியின் பெருமையை உலகமறிய வேண்டுமென்ற தூயநோக்கத்துடன் இந்நூல் எழுதப் பெற்றுள்ளது. யாவரும் இந்நூலை விலைக்குப் பெற்றுப் படித்து நற்கதியைப் பெறுவார்களாக.

ஞானப்பணி புரிந்து கொண்டிருக்கின்ற திரு. அம்பிகைபாகன் அவர்களுக்கு தீர்க்காயுளையும், சீரையும சிறப்பையும் நல்லைக் கந்தன் அருள்வானுக.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ: இல. M B 11543

வயித்திலிங்கம் நாகலிங்கம் கைம்பெண் நாகரத்தினம் வீமன் காமம்தெல்லிப்பழை —வழக்காளி

எதிராக

1. தம்பையா ஐயாத்துரை சுப்பிரமணியம் 2. பெண் இராசம்மா இருவரும் தாவடி —எதிரிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11543-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1972-ஆம் ஞு செப்ரெம்பர் மாதம் 20-ஆம் ௳ (20-9 72) புதன்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும.

தீர்வைத் தொகை; ரூபா 16422-40 சதம், பின் 10-3-70 தொடக்கம் 4-4-71 வரை ரூபா 12830/-க்கு 8 வீத வட்டியும் பின் முழுத்தொகையும் இறுபடும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 569-84 சதம். இதில் தீர்வைத்தொகையில் ரூபா 4700/-ம் செலவுத் தொகையில் ரூபா 500/-ம் கொடுபட்டது,

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் வலிகாமம் வடக்கு உடுவில் கோவிற்பற்று தாவடிஇறை "பெரியபுலம்" பரநி 4½ கிணறும் கல்வீடும் பயிர்களும வடகிழக்குப் பக்கத்தில் இருக்கும் கிணற்றில் கிழக்கெல்லைக் காணியின வடக்குப் பக்கமாகத் தண்ணீர்ப் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்பு உருத்தும் எல்லைகிழக்கு சின்னப்பு சுப்பிரமணியம் பெண் சின்னப்பிள்ளையின் ஆதனம். வடக்கு தர்மலிங்கம் பெண் மகேஸ்வரியின் ஆதனம். மேற்குஒழுங்கை தெற்கு சின்னத்தம்பி பெண வள்ளியம்மையின் உரிமைக்காரரின் ஆதனம். வடக்கு எல்லைப் பக்கமாகக் கிழக்கெல்லைக் காணிக்கு உரிய பாதையும் புறநீங்கல. மிகுதி அடங்கலும் வீடும. மற்றும் கட்டிடங்களும் அதைச் சேர்ந்தவைகளும்.

சி. சே மாரிமுத்து
கொமிசனரும் விலைமதிப்பாளரும்
உத்தரவுபெற்ற ஏலதாரரும
விதானை வளவு, சித்தன்கேணி
17.7-72 217 25-8-72

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல. M. B 10291

அப்புத்துரை திரவியம் வட்டுக்கோட்டை மேற்கு —வழக்காளி

எதிராக

(1) முருகுப்பிள்ளை அமிர்தநிகா மணிப்பிள்ளையும் பெண்
(2) நாகேஸ்வரி 484/12 புளுமெண்டல் வீதி கொழும்பு—13
(3) செல்லப்பா செல்வநாயகமும் பெண் (4) சிவபாக்கியமும
(5) நல்லதம்பி பொன்னுத்துரையும் பெண் (6) தைரியலட்சுமி-சகலரும் வட்டுக்கோட்டை மேற்கு எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10291-ம் இலக்க வழக்கில் எனச்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல விபரிக்கப்படும் துண்டுக் காணி 1972-ம் ஞு ஆவணி மாதம 30-ந் ௳ புதன்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத் தொகை முதல்வட்டி ரூபா 991875 ம் 12-9-69 தொடக்கம் 11-4-69 வரைக்கும் ரூபா 7500/- க்கு 9 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 450/- இம் முழுத் தொகையிலும் ரூபா 2250/- கழித்து மிகுதி முழுவதும்

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி வட்டுக்கோட்டைக் கோயில் பற்று வட்டுக்கோட்டை மேற்கில் உள்ள ஐயிந்தனை என்னும் 9 நிலப்பரப்பும் 1¾ குளியுடன் 2 நிலப்பரப்பும் இன்னுமொரு 5½ குளியும் சேர்த்து முற்றிலும் 11 பரப்பும் 6¾ குளியும் ஆனுல் அளவுப்படி 11 நிலப்பரப்பும் 1 குளியும் கிணற்றில் அரைப் (½) பங்கும். இக் காணிக்குள் அடங்கிய வான்பயிர் வளர்பயிர்களும் இதற்கு எல்லை கிழக்கு கணபதிப்பிள்ளை பொன்னையாவினதும் நாகமணி தம்புவினதும் ஆதனங்கள் வடக்கு சுப்பிரமணியம் கைம்பெண் இராசம்மாவினதும் செல்லப்பா பெண் நாகமுத்துவினதும் ஆதனங்கள். மேற்கு ரேட்டு. தெற்கு முருகன் பெண் செல்வியினதும் ஆதனம். இது அடங்கலிலும்,

சோ. நரசிங்கம் J. P.
நீதிமன்ற விற்பனையாளரும்
மதிப்பாளரும்.
தொல்புரம் 15-7-72, M. 218

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

கந்தப்பிள்ளை சின்னத்தம்பு, தெல்லிப்பளை மேற்கு —வழக்காளி

இல. M B 11279 எதிராக

காலம் சென்ற பெரியவிழான் சிமியன்பிள்ளை மனுவேல்பிள்ளையின் ஆதனங்களின் சட்ட பூர்வமான பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட பெரியவிழான் சிமியன்பிள்ளை மனுவேல்பிள்ளை கைம்பெண் எக்னஸ்ராணி —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் MB/11279-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் இரு துண்டுக்காணிகளை 1972ம் ஆண்டு ஐப்பசி மீ 9ம்திகதி திங்கட்க்கிழமை முற்பகல் 10-30 மணிதொடக்கம் அந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும் (9-10-72)

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபாய் 1676/-ம் 28-11-69 தொடக்கம 3-12-70 வரைக்கும் ரூபாய் 900/-க்கு ௲% வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 415-28.

### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் மேற்கு பண்டத்தரிப்பு கோவிற்பற்று பெரியவிழான் இறை "மணியாண்டிக்காடு" நிலப்பரப்பு 6ம, வீடு செய்பயிர் வான்பயிர்களும் கொண்டதுயான ஆதனம் கிழக்கு அந்தோனிப்பிள்ளை சந்தியாப்பிள்ளையின் ஆதனம வடக்கு கீழே குறிக்கப்படும் இரண்டாம் காணியும் அந்தோனிப்பிள்ளை பிரஞ்சிப்பிள்ளையின் ஆதனமும் மேற்கு ரேட்டு: தெற்கு மனுவேல்பிள்ளையின் பெண் அனனம்மாவின் ஆதனம் இவ்எல்லைகளைக் கொண்ட ஆதனத்தில் சொரியலாக அரைவாசியும் வடக்கு எல்லையிலுள்ள கிணற்றில் தண்ணீர்ப்பங்கும், வழிவாய்க்கால் உரித்தும் ஆனுல் இக்காணிக் கூடாக தெற் கெல்லை காணிக்குரிய வழிவாய்க்கால் உரித்தும் புறநீக்கலாக

ஷெ "மணியாண்டிக்காடு" நிலப்பரப்பு 2¾யும் வான்பயிர்களும் செய்பயிர்களும் கொண்ட ஆதனம கிழக்கும் மேற்கும் அநதோனிப்பிள்ளை பிரஞ்சிப்பிள்ளையின் ஆதனம் மேற்த ரேட்டும், தெற்கு மேலே விபரிக்கப்பட்ட முதலாம் காணி இதடங்கலும கிழக்கு எல்லையிலுள்ள கிணற்றிற் பங்கும்

சி செ. பாலசிங்கம்
அராலிவடக்கு, கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
வட்டுக்கோட்டை, 15-8-72 211 25-8-72

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

1. முருகேசு சிதம்பரப்பிள்ளை மட்டுவில் நாடு, பூநகரி யாழ்ப்பாணம, வழக்காளி.

வழ. இல. M. B. 10911 எதிராக

1. வலலிபுரம் கைம்பெண் வள்ளியம்மை சட்டபூர்வமான பிரதிநிதித்துவம்பெற்ற அவவின் காலம்சென்ற கணவன் சிதம்பரப்பிள்ளை வலலிபுரம் அவர்களின் காணியின் உருத்தாளி.
மட்டுவில் நாடு - பூநகரி யாழ்ப்பாணம். எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிககோட்டின் M B 1091I ம் இலக்க வழக்கில் ஏனக்குக கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல விபரிக்கப்படும ஒரு துண்டுக்காணி 1972ம ஆண்டு ஐபபசி மாதம் 2ம் திகதி ( 2-10-72 ) திங்கட்கிழமை முற்பகல் 11 மணி துவக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை :- முதல் வட்டி ரூபாய் 1913-00க்கு 23-6-69 தொடக்கம் 2-3-70 வரைக்கும் ரூபாய 1000/-க்கு வருடம ஒனறுக்கு 12% வட்டியும் அதன் பின முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை வருடம ஒன்றுக்கு 5% வட்டியும கோட்டுச் செலவு 340-87 சதம்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் பூநகரி கோவிற்பற்று மட்டுவில் நாடு இறை "செகிடன் வயல்" பர. நில இலா.40 இதற்கு எல்லை கிழக்கு சங்கரப்பிள்ளை ஆறுமுகத்துக்கு உரிய ஆதனம். வடக்கிலும், மேற்கிலும் வய்க்கால தெற்கு பொன்னம்பலம் கந்தையா பெண தெய்வானைப்பிள்ளைக்கு உரிய ஆதனம். இதடங்கலும். பதிவு இல: G 24/282

ப. நா தருமலிங்கம்
167/1 கோவில் வீதி, கொமிஷனரும், விலைமதிப்பாளரும்,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம். 12-8-72,
212 25 8-72

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

1. கனகசபை சுந்தரலிங்கம் 2. மனைவி இராசேஸ்வரி இருவரும்: தங்கோடை, காரைநகர். வழக்காளி

வழ இல: M B 11835 எதிராக

ஆறுமுகம் கனகசபை கைம்பெண் பாக்கியலெட்சுமி B. A.தம்பி ஒழுங்கை, வண்ணுர்பண்ணை மேற்கு, யாழ்ப்பாணம். --எதிராளி

யாழ்ப்பாணம மாவட்ட நீதிமன்ற M B 11835-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1972-ம் ஆண்டு புரட்டாதிமீ 13-ந் திகதி (13-9-72) புதன்கிழமை முற்பகல் 10-00மணிதொடக்கம் அந்தநதக காணிகளுள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 13409/-ம் 7-7-70 தொடககம 30-1-71 வரைககும் ரூபா 10000/-க்கு 10வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும இறுக்குமவரை 5வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 513-81 இதில் ரூபா 2200/- கழிக்கவும்,

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கும் பகுதியும் வண்ணுர்பண்ணை கோவிற்பற்று வண்ணுர்பண்ணை தென்மேற்கிறை வாரிவளவு நி. பர. 7 ஆனுல் 1951ம் ஆண்டு ஆடி மாதம் 13ம் திகதி உத்தரவுபெற்ற நில அளவையாளர் M, அலோசியஸ் என்பவரால் தயாரிககப்பட்ட 1531ம் இலக்க படத்தின்படி நி. பர. 5குளி 6, 4/5ம் இருகல்வீடுகளும் கிணறும் செய்பயிர் வான்பயிர்களும் சொல்லப்பட்ட நி. பர 5 குளி 6, 4/5 எல்லை கிழக்கு இராமலிங்கம் நடேசுவுக்கும் மகள் பாக்கியம் இரத்தினசிங்கத்தின் மனைவிக்குரிய ஆதனம், வடக்கு பொன்னையா இராசரத்தினத்துக்கும் மறுபேர்களுக்குமுரிய ஆதனம், மேற்கு தாமோதரம்பிள்ளை பெண் நல்லநாயகியின் ஆதனமும். ஒழுங்கையும் நாகலிங்கம் பெண் தங்கம்மாவின் ஆதனமும். தெற்கு நாகலிங்கம பெண் தங்கம்மாவிற்தும் கணபதிப்பிள்ளை கனகரத்தினத்துக்கும் மறுபேர்களுக்குமுரிய ஆதனங்கள் இதடங்கலும்.

'வேல்பதி' S. சங்காப்பிள்ளை J. p.
புத்தூர். கொமிஷ்னர் & விலைமதிப்பாளர்
8-7-72 214 25 8-72

---

## சந்நிதிக் கந்தன் தோத்திரம்

*அளவையூர், அருட்கவி திரு. சீ. விநாசித்தம்பி அவர்கள் சந்நிதிக்கந்தன் பேரில் பாடிய "வேல் மாலை" என்னும் நூல் 23-8-72 இல் நிகழ்ந்த தேர்த் திருவிழாவன்று இலவசமாக வழங்கப்பெற்றறு.*

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வட்டுக்கோட்டை, கொட்டைக்காடு

1. நடராசா சோமசுந்தரமும் மனைவி 2. சௌபாக்கியவதியும்

M B 12622 எதிராக —வழக்காளிகள்

காலம்சென்ற S J. கந்தையாவின் சட்டப்படியான பிரதிநிதி, கொழும்பு, கோட்டை தபால், தந்தி போக்குவரத்து தலைமை நிலையம், தலைமை அதிபரின் அலுவலகம், குமாஸ்தா கந்தையா அருமைநாயகம் —எதிராளி

M B 12622ம் இலக்க வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ்க்காணும் ஆதனம் 1972ம் ஞு (செப்ரெம்பர்) புரட்டாதிமீ 28 ௳ (28-9-72) வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அவ்வாதனத்துவ் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீரவைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 1280/- மேலும் ரூபாய் 1000/- ரூபாவுக்கு 2—7—71 தொடக்கம் 9—12—71 வரைக்கும் வருடம்மொன்றுக்கு பத்து வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரைக்கும் ஐந்து வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 48-80 சதம் பவுணடேச் மற்றும் விற்பனவுக்குரிய சலார்களும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி சங்கானை கோவிற்பற்று மூளாய் இறை "பிட்டி" (Pitty) நெற்பரப்பு 10 இதற்கு எல்லை கிழக்கு: வேலு கந்தையாவுக்கும் மனைவி தெய்வானைக்கும் மற்றவர்களுக்குமுரிய ஆதனங்கள், வடக்கும் தெற்கும் S. J. கந்தையாவின் உரிமைக்காரர்களின் ஆதனங்கள், மேற்கு: மயில்வாகனம் கைம்பெண் மகாராசியினுதனம், வடக்கெல்லை காணியிலிருக்கும் கிணற்றில் பங்குடன் தூர்வை வாய்க்கால் பாவிப்புரித்துடன் இது முழுவதும்.

வி. செ, குட்டிப்பிள்ளை
'இராசகிரி" ஏல விற்பனவாளர். கொமிஷனர்
643. காங்கேசன்துறைவீதி, Auctioneer Sales & Valuer
யாழ்ப்பாணம். 220. 25-8-72

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

1. V. ஆறுமுகம் முருகேசபிள்ளையும் மனைவி
2. ஞானதேவி இருவரும் காரைநகர் கிழக்கு, தற்சமயம் சய்றியா. அவர்களின் அற்ரேனி இராமநாதர் முருகேசு காரைநகர் கிழக்கு; காரைநகர் —வழக்காளி

வழ. இல: M B 11017 எதிராக

1. மொகமெட் அப்துல்லா காதர் மொகிடீன்
2. மனைவி நொயினுமொகமெட் நாச்சி இருவரும் நம்: 77 முஸ்லீம் கல்லூரி ரேட், வண்ணுபண்ணை மேற்கு, யாழ்ப்பாணம். —எதிராளி

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M B 11017ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1972ம் ஆ. புரட்டாதி மாதம் 11ம் திகதி (11-9-72) திங்கட்கிழமை முற்பகல 10மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விறகப்படும்.

திர்வைத்தொகை: முதல் வட்டி ரூபய் 9545/-ம் 6-8-69 தொடக்கம் 16-2-70 வரைக்கும் ரூபாய் 6000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைகரும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 511-72 இதில 28-2-71 இல கொடுக்கப்பட்ட ரூபாய் 5000/- கழிக்கவும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் பகுதியும் வண்ணுர்பண்ணைக் கோவிற்பற்று வண்ணுர்பண்ணை தென்மேறகு ஆனைவிழுந்தான் நி. பர. ஒன்று குளி ஐநது தசம் ஆறு (நி. பர. 5·6 குளி) உத்தரவு பெற்ற நில அளவையாளர் J மனுவேல் அவர்களால் 5-11-1945 தயாரிக்கப்பட்ட இல: 282ம பிளானில் துண்டு 2 இந்த நி. பர. ஒன்று குளி 5·6 வீடும், கிணறும், கற்கூசும், தெற்கெல்லையிலிருக்கும் கிணற்றில் அரைவாசிப் பங்கும் இதற்கு சேர்ந்த மற்றவையெல்லாம் எல்லை கிழக்கு ரேட்டு, வடக்கு துண்டு 1 சொல்லப்பட்ட பிளானில் மொகமெட் மொகிடீன் சாகுல் கமீட் பெண் சித்தி சலீனுவுடையது மேற்கு முகமெட் முகமெட் மீரப்பிள்ளை தெற்கு மாதர் சாகிப் சுலைமன் லெபெ மரிக்கார்

'வேல் பதி" S. சங்கரப்பிள்ளை J. P,
புத்தூர். 7—7—72 கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
M 215 25—8—72

## பித்தன்

2-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

யும் பொருட்டு, தன்னைத் தியாகம்செய்யத் தயாராகவுள்ளபடியால் அவரைத் தியாகேசன் என்றழைப்பார்கள்.

### பேயிடம் நஞ்சுண்ட பித்தன்

திருமாலான கண்ணன் ஒரிடத்தில் ஒரு பெண்ணின் மகனுகப் பிறந்து வேறொரு பெண்ணின் மகனுக வளர்ந்து வருகிறன். கண்ணனைக்கொல்ல அவதாரம் செய்த திருமால் யார் வீட்டில் வளர்கிறன் என்பதை அறியாத கம்சன், பூதனை என்ற அரக்கியை ஏவி அந்நாட்டிலுள்ள குழந்தைகளை எல்லாம் தந்திரத்தாலோ அல்லது மாயத்தாலோ கொல்லும்படி பணித்தான்.

கோகுலத்திலுள்ள ஓர் இடையர் மாளிகையில் ஓர் அற்புதக் குழந்தையாக நந்தகோபாலன் வளர்ந்து வருவதை பூதனை கேள்விப்பட்டு, அழகான பூங்கோதையின் வடிவமாகச்சென்று' நஞ்சுதீட்டிய வெம்முலையுடன்" நந்தகோபாலனின் மாளிகையுனுள் புகுந்தான்.

குழந்தையோ தாய்ப்பாலை யுண்ண மறுத்து தவழ்ந்தோடி அப்பால் மறைய அது தான் சமயமென்று பூதனை கண்ணனை நோக்கி விரைந்தாள். கள்ளக் கண்ணனும் தன் கடமையை நிறைவேற்ற அவள் முன்னே தவழ்ந்து சென்றுன். பூதனை கோபாலனை தூக்கி நஞ்சூட்டப்பட்ட தன் வெம்முலையை வேணுகோபாலன் வாயில் வைத்தாள். கள்ளக் கண்ணன் நஞ்சுப்பாலை பருகும் பாவனையில், பூதனையின் உயிரையும் சேர்த்து உட்கொண்டான்.

அப்போது இடிமுழக்கம் போன்ற ஒலியுடன் பூதனை தன் சுய உருவத்துடன் துடி துடித்து பூமி மீது வீழ்ந்து மடிந்தான். சத்தத்தைக்கேட்டு அவ்விடம் ஓடிவந்த யசோதையும் சுற்றத்தாரும் நடந்ததின் உட்பொருளை ஊகித்தறிந்து, மாதவனை வாழ்த்தினுர்கள் என்பது ஸ்ரீ மத் பாகவத வரலாறு.

தாய் கொடுக்க வந்த அமுதத்தை பருக மறுத்து பேய் கொடுத்த நஞ்சினையுண்ட கண்ணனை, செய்யத் தக்கதை செய்யாமல் செய்யத்தகாததைச் செய்யும் "பித்தனேடு" தானே ஒப்பிடவேண்டும். தவழும்வயதிலேயே தயாநிதியாம் கண்ணன் செய்த இந்த பித்துச் செயலை எண்ணிப் பெரியாழ்வார் "பேய்ப் பால் முலையுண்ட பித்தனே" என்றும குலசேராழ்வார் 'பேய் முலைவாய் வைத்து உலகையுண்ட பித்தனென்றே பிறர் ஏச நின்ருய்" என்றும திருமங்கையாழ்வார் "பேய் முலையில் நஞ்சுண்ட பித்தன்" என்றும் பாடியுள்ளார்கள்.

(வளரும்)

---

நேயர் நெஞ்சம்

## நல்லைத் திருவிழா

நல்லைக் கந்தன் ஆலயத் தேர் தீர்த்தத் திருவிழாக்களை வானுெலியில் அஞ்சல் செய்து வரும்வழக்கம் பல ஆண்டுகளாக இருநது வருகிறது. இந்த நல்ல முயற்சியினைச் செய்வதற்காக சமபந்தப்பட்டோர் அனைவரையும் பாராட்டுதல் வேண்டும். மேற்படி அஞ்சல் நிகழ்ச்சி இன்னமும் சிறபபாக அமையாதோ என அடியார்கள் பலர் பேசிக்கொள்வது வழக்கம். இந்த விழா நிகழ்ச்சிகளைத தெளிவாகக் கேட்க முடிவதில்லை. அது ஒருபுற மிருக்க, நிகழ்ச்சி வர்ணனையை நடத்தும் அறிவிப்பாளர்களுட் சிலர் சைவமெய் அடியார்களது மனவிருப்பத்தை நிறைவு செய்யக்கூடியவர்களாக இல்லாதிருப்பது வழக்கமாகிவிட்டது. சைவகோயிலின் இந்தவிழாநிகழ்ச்சி யஞ்சலுக்குச் சைவசமய சீலமும், சமய அறிவுத்திறனும். பக்திச் செல்வமும், ஒருங்கமைந்தவர்களாக விளங்குவதுஅவசியமாகும, சென்ற சில ஆண்டுகளாக தேர் தீர்த்த அஞ்சல் வர்ணனை நிகழச்சிகள் யாவும் திருப்தியளிக்கத்தக்கவையாக அமைந்திருக்கவில்லையாதலால் இவ்வாண்டாவது (1972) சிறந்த முறையில் வேண்டியன செய்வார் களென அடியார்கள் எதிர்பார்க்கிறுர்கள். பின்வரும் குறிப்புகளைநிறைவேற்றிவைக்க அஞ்சலுக்கென நல்லூருக்குவரும் அதிகாரிகள் முன் வருவார்களாக.

(1) தேர் தீர்த்த அஞ்சல்களை ஆரம்பத்திலிருந்து முடிவு வரை தெளிவுறக் கேட்க வழி செய்க.

2, 'அர்ச்சனை பாட்டேயாகும்' எனச் சிறப்பிக்கப்பெறுவதால்–ஆங்குநிகழும் பஜனைப் பாராயண நிகழ்ச்சிகளை வழமையிலுங் கூடுதலான நேரம் ஒலி பரப்புங்கள்.

3, விழாக்களின் தத்துவம், சிறப்பு, அடியர் பெறும் பயன் மக்கள் கைக்கொள்ள வேண்டிய விதி முறைகள், கோயிற் தொன்மைகள் இவைகளை விளக்குக.

4, இந்த இரு தினங்களிலும் இரவுத்திருவிழாவில நிகழும் கந்தபுராண விரிவுரையையும் இரவுத திருவிழா பசனையையும் கொடி இறக்கத் திருவிழா நிகழ்ச்சிகளையும ஒலிபரப்ப ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும.

(5) தேவஸ்தான அறக்காவலர் அவர்களது கனிந்த குரலை தேவாலயத்திலிருந்து சைவஉலகம் கேட்கும்படியான ஒ. சந்தர்ப்பத்தை இ. ஒ ப. கூ, தாபனத்தினர் செய்து உதவுல் நலம். ஒலிபரப்பு நேரத்தைக் கூட்டுக.

கா. இரகுநாதன்
காயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம். 13-8-72

---

### மறைந்தனர்

தமிழ்நாடு ஆஸ்தான வித்துவான் நாமக்கல் கவிஞர் வே. இராமலிங்கம்பிள்ளை 24-8-72 காலை காலஞ்சென்று விட்டார். கவிஞர் இராமலிங்கம்பிள்ளை இலங்கைக்கும் முன்னர் விஜயஞ் செய்துள்ளனர் கவிஞர் மறைந்த செய்தி கிடைத்ததும் தமிழ்நாட்டின் பிரமுகர்கள் அனுதாபததை தெரிவித்தனர்.

---

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

---

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக; வண்ணுர்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில்; 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மூ. மயில்வாகனம் அவர்களால் 25—8—1972 வெள்ளிக்கிழமை-அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
பத்திராதிபர்: திரு. மூ. மயில்வாகனம் அவர்கள்

---

சைவ பரிபாலன சபையாரால் நடாத்தப்படும்
சித்தாந்த பிரவேச பண்டிதர்,
சித்தாந்த பால பண்டிதர்,
சித்தாந்த பண்டிதர்

## பரீட்சைகள்

நல்லூர்த்திருவிழாக்காரணமாகப் பின் போடப்பட்டிருக்கின்றது.

பரீட்சைத் திகதி பின்னர் தெரிவிக்கப்படும்.

சைவப்புலவர்
க. சிற்றம்பலம்
பரீட்சைக் காரியதரிசி
சைவ பரிபாலனசபை,
யாழ்ப்பாணம், 9-8-72

---

## குருமகாசந்நிதானம்

1ம் பக்கத்து வளர்ச்சி

என்று கூறினேன், மகாசந்நிதானம் அவர்கள் புறப்பட்டு போகவேண்டாம் மாலைக்குள் சரியாகப் போய்விடும் என்று தெரிவித்தார்' மேலும பல புலவர்மக்கள் பாராட்டுரைகள் வழங்கினுர்கள்.

—0—

### வேலணை முத்துமாரியம்பாள் கோவில்

புராதனமான இக்கோவிலின் இரதோற்சவம் 24-8-72 அன்று சிறப்பாக நடைபெற்றது. இக்கோவிலுக்குத் தேவையான சித்திரத்தேர்வேலை நடந்து கொண்டிருக்கிறது. அடுத்த வருடம் புதிய தேர் வெள்ளோட்டம் நடை பெறுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வழக்கு இல: M B 10909

கரம்பன் T. A. ருசையாபிள்ளை கைம்பெண் ஏலிஸபெத்முத்தம்மா —வழக்காளி

எதிராக

சரவணை புளியங்கூடல்
(1) கந்தையா சுப்பையயா
(2) பெண் கனகேஸ்வரி —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M B 10909-ம் இலக்க வழக்கில் எனக்கு கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பினனல் விபரிகப்படும் ஒருதுண்டுக்காணியை 1972ம் ஆு ஐப்பசி மீ 4ம்திகதி (4-10-72) முறபகல் 10 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விறகப்படும்.

தீர்வைத் தொகை முதல் வட்டி ரூபாய் 3810/- ரூபாய் 1800/- குறைபட இன்னும ரூபாய் 2000 த்துக்கு 23-6-69 தொடக்கம 21-7-70 வரைக்கும் 18வீத வட்டியும் அதன் மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 253-15 செலவில் ரூபா 100/- கொடுபட்டுளளது.

#### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் ஊர்காவற்துறை கோயிற்பற்று சரவணையிறை "உளுந்துச்சட்டி' பர-நில-இலா8½ வீடு கிணறு செய்பயிர் வான் பயிர்களுடன் இதற்கெல்லை கிழக்கு விசுவலிங்கம் பெண செல்லம்மாவினுதனம் வடக்கு செல்லத்துரை பெண் முத்தம்மாவினுதனம் மேறகு சரவணமுத்து படியலிங்கத்தின் ஆதனம்] தெற்கு ரேட்டு.

அ. போ. எதிர்மானசிங்கி
கொமிஷனர், விலை மதிப்பாளர்
14, டேவிட் ரேட் 21-8-72
யாழ்ப்பாணம். 223—72

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

'(இறந்த) அண்ணுமலை கணபதிப்பிள்ளை புங்குடுதீவு கிழக்கு, அண்ணுமலை கணபதிப்பிளளை கைம்பெண் அனனம்மா 2183ம் D. C. J தத்துவ வழககில் இறந்துபோன வழககாளியின் மரண சாதகத்தின் சொல்லப்பட்டபடி —வழச்காளி

இல: M. B 781 எதிராக

(இறப்பு) விசுவநாதர் ஆறுமுகம் புங்குடுதீவுகிழக்கு —எதிராளி ஆறுமுகம் தியாகராசா எதிராளியின் சட்டபூர்வமான பிரதிநிதி

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M B 781ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிககப்படும் ஒரு துண்டுக்காணி 1972-ம ஆு ஐப்பசிமாதம் 16ம் திகதி (16-10-72) திங்கட்கிழமை முறபகல 10 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நினறு பிரசிதத ஏலத்தில் விறகப்படும.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 750/-ம் 18-2-56 தொடக்கம் 5-7-55 வரைக்கும் ரூபாய் 500/-க்கு 15 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும். கோட்டுச்செலவு ரூபாய் ———

#### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவப்பகுதி புங்குடுதீவு கோவிற்பற்று புங்குடுதீவு கிழககு இல: 21855 பிரதம படத்திற் குறிப்பிட்ட இக்காணியில் வெளி என்னும் காணியின் தென்புறம் ஏக்கர் 10 றூட் 1 பேட்சஸ் 11 இதறகு நெறபரப்பு 247 குளி 7, 4/5 இதில தென்புறமாக அறுதிவிறற நெற்பரப்பு 40ம் கிழக்குப் புறமாக சீதனம் கொடுத்த நெற்பரப்பு 50ம ஆக இருவகையும கூட்டி நெற்பரப்பு 90 நீக்கி மீதம் நெற்பரப்பு 157 குளி 7, 4/5 எல்லை கிழக்கு குளமும், சபாரத்தினம் கைம்பெண் மாணிககத்தின் ஆதனம், வடக்கு எதிரிக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், மேற்கு ரேட்டு தெறகு ஐயம்பிள்ளை நல்லதம்பியின் ஆதனமும், எதிரியின் ஆதனமும் இதடங்கலும். பதிவு இல: C 275/46

வேல்பதி'
புத்தூர். 16-8-72

S. சங்கரப்பிள்ளை J. P.
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
216, 25—8—72

---

## கோட்டுக்கொம்மிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் வழக்கு. இல: 11295

1. வேலாயுதம் பரமு கைம்பெண் நாசகப்பிள்ளை
2. ஆறுமுகம் மகள இரட்ணமணி, புலோலி தெற்கு, புலோலி —வழக்காளிகள்

எதிராக

கந்தையா பசுபதி கைம்பெண் பாக்கியம், வராத்துப்பளை, புலோலி கிழக்கு, பருத்தித்துறை —எதிராளி

மேற் குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்தகொமிஷன அதிகாரப்படியும் இதன் கீழ விபரிக்கப்படும்ஆதனங்களை 1972ம-ஆு புரட்டாதிமீ 20மதிகதி (20-9-72) புதன்கிழமை முற்பகல 10 மணி தொடக்கம குறிதத ஆதனங்களிடமாகவிருந்து என்னுல் பிரசித்த ஏலததில்விற்கப்படும்.

#### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி பருத்தித்துறைக கோவிற்பற்று

1. வராத்துப்பளையிறை சீனம்பியன் தோட்டம் நி பர. 28 இதிலாட்சிப்படி நடுப்பெற ஆறிலொரு பங்குககான நி பர. 4 குளி 12 இதற்கு ஆட்சிலிருககும் (நி. பர. 8 குளி 6¾) நி பர. எட்டு குளி ஆறேமுககால பனைகள, வடலிகள், கல்வீடு, கிணறும எலலை கழககு. சின்னக்குட்டி இரத்தினததுக்குரிய ஆதனமும, கணபதி பிள்ளையினுரின உரிமைக்காரருககுரிய ஆதனமும், வடககு: சின்னக்குட்டி இரத்தினதுககுரிய ஆதனம், மேற்கு: வேலுபபிள்ளை செலவவினுயகததுக்கும மறுபேருக்குமுரிய ஆதனம். இவவெல்லைககுட்பட்ட நிலததிற் சொரியலாக நாலிலொரு பங்கும். கிழக்கறை நிந்தமாகவும குசினி சவுக்கண்டியில் அரைவாசியும், கிணற்றில் நாலிலொரு பஙகும். இதற்கு கோட்டால் அனுமதிக்கபபட்ட விலை ரூபா 12,000

2. ஷெ இறை சீனமபியன்தோட்டம் நி. பர. 7 குளி 8. 16/32 இதற்கு யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டு 15375ம் இலக்கப் பிரிவிடல வழக்கில் அணைக்கபபட்டதும, உலாநதா மேஸ்தர் க. கணபதிப்பிளளையால் 1922ம ஆு சித்திரை மாதம் 24ம் திகதி விநதாரிககப்பட்டதுமான படத்தில் 1ம் நமபர் துண்டுக்கு நி. பர. 4 குளி 8, 22/32 (எட்டுடன் முப்பததிரண்டில் இருபத்திரண்டு) எல்லை கிழக்கு: ரேடடு வடககு குறித்த படத்தில 2ம நமபர் துண்டும், கணபதி பிள்ளையினுரின உரிமைக்காரருக்குரிய ஆதனமும, மேற்கு கையொழுங்கை, தெறகு ஒழுங்கை, இவ்வெலலைக்குட்பட்டவைகளில் சொரியலாக நாலிலொரு பங்கும், இதற்கு கோட்டால் அனுமதிககப்பட்ட விலை மதிப்பு ரூபாய் 4,000/-

| | | | | |
|---|---|---|---|---|
| தீர்வைத்தொகை: ...... | ...... | ரூபா | 3784 | 16 |
| ரூபாய் 3000/-க்கு 10% வட்டி 22-3-71 தொடக்கம் | 17-6-71 வரை | | 75 | 00 |
| ரூபாய் 3859-16க்கு 5% வட்டி 18-6-71 தொடக்கம் | 11-7-72 வரை | | 203 | 27 |
| கோட்டுச் செலவு | ...... | | 247 | 58 |
| மொத்தம் ...... | ...... | | 4309 | 91 |
| செலவில் ரூபா 125/- கொடுக்கப்பட்டது. | | | 125 | 00 |
| மிகுதி ...... | ...... | | 4184 | 91 |

இன்னும் ரூபாய் 3859-16க்கு 12-7-72 தொடக்கம் விற்பனவுத் திகதி வரையும் 5 வீத வட்டியும்

'சந்நிதி வேல்"
பருத்தித்துறை.
16-8-72.

கா. முத்துக்குமாரு ஐயர்
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
219 25-8-72